பக்கங்கள் 4 விலை சதம் 40 ★

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 ஆவணி 11 றமழான் 11 இதழ் 196
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 27-8-77

## உணவுப் பங்கீடு ஒருவிசேஷ சலுகை

(கொழும்பு)

நாட்டில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து தங்களின் இருப்பிடங்களைவிட்டு வேறு இடங்களுக்குச் சென்றோர்கள், தங்களின் வாராந்த பங்கீட்டு அரிசி மற்றும் உப உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் புதிய ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இவர்கள் தற்போது தங்கியிருக்கும் பகுதிகளைச் சேர்ந்த உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்கு விண்ணப்பித்து, விசேட உணவு அனுமதிப்பத்திரத்தைப் பெற்று, பங்கீட்டுப் பொருள்களை வாங்கிக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பத்தை அனுப்பும்போது, கூப்பன் புத்தகங்களின் எண்ணிக்கை, கடைசியாகப் பங்கீட்டு உணவுப் பொருள்கள்பெற்றுக்கொண்ட கடையின் பெயர், விலாசம், விண்ணப்பதாரரின் பெயர் விலாசம், விசேட உணவு அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதன் காரணம் ஆகியவற்றைத் தெரிவிக்க வேண்டும்.

அசம்பாவிதங்களினால் நீங்கள் குடிபெயர்ந்தபோது, உங்கள் கூப்பன் புத்தகங்கள் காணமற்போய்விட்டால் அல்லது அழிந்துவிட்டாலும் இந்த

(3-ம் பக்கம் பார்க்க)

# பஸ், ரயில், கப்பல், விமானத்தில் வடக்கேகுவியும் தமிழ் அகதிகள்!

## காங்கேசனில் கர்ப்பிணிகள்

### குழந்தைகள் வந்திறங்கிய பரிதாபம்

**உலகின் பல பாகங்களிலிருந்தும் சகல நவீன வசதிகளையுமுடைய அலங்காரக் கப்பல்களில் ஆடம்பரமாகக் காட்சியளித்துக்கொண்டிருக்கும் கொழும்புத் துறைமுகத்திலிருந்து சென்ற புதன்கிழமை நள்ளிரவுக்குப்பின் இலங்கைக் கப்பற் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான மூன்று சரக்குக் கப்பல்களில் அகதிகளாக ஏறிய சுமார் இரண்டாயிரம் தமிழ் மக்கள், தமது சொந்தமண்ணில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த காங்கேசன்துறைத் துறைமுகத்தில் நேற்றுப் பிற்பகல் வந்திறங்கியபோது அன்புடன் வரவேற்று உபசரிக்கப்பட்டு அவரவரின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.**

கைக் குழந்தைகளுடனும் சிறுவர் சிறுமியர்களுடனும், வயோதிபர்களுடனும், கர்ப்பிணிகளுடனும், நோயாளிகளுடனும் வந்த மூன்று கப்பல்களும் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் காங்கேசன்துறைத் துறைமுகத்தை வந்தடைந்தது.

### சிறப்புமிகு ஏற்பாடு

இவர்களை வரவேற்று உணவளித்து அவரவரின் சொந்த இடங்களுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகள் மிகச்சிறப்பாகச் செய்யப்பட்டிருந்தன. கப்பல்கள் வந்து சேர்ந்ததும் கப்பல் ஏஜண்டும், காங்கேசன்துறை பட்டினசபையின் முன்னாள் தலைவருமான திரு. க. ஜெயபாலசிங்கமும், அகதிகளைக் கரைசேர்க்கும் பணிகளைக்கவனிப்பதற்குப்பொறுப்பாக இருந்த பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கமும் 'லங்காராணி' என்ற முதல் கப்பலுக்குச்சென்று பார்வையிட்டுத் திரும்பினர்.

### துறைமுகத்துக்கு வந்த பிரமுகர்கள்

அகதிகளை வரவேற்பதற்கு எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. எம். சிவசிதம்பரம் மற்றும் கூட்டணி எம். பி க்கள், முன்னாள் எம். பி.க்கள், பிரமுகர்கள் தொண்டர்கள் ஆகியோரும் அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் உயர் அரசாங்க அதிகாரிகளும் துறைமுகத்தில் நின்றனர்.

ஜனக்கூட்டத்தைக் கட்டுப்படுத்துவது மற்றும் உதவிகளை கடற்படையினர் சிறப்பாகக் கவனித்தனர். தொண்டர்களும் சாரணர் படையினரும் உதவியளித்தனர். கரையிருந்து வள்ளங்கள் மூலம் உணவுப் பார்சல்கள் கப்பல்களுக்கு அனுப்பப்பட்டன. கப்பல்களிலிருந்து இறங்கிக் கரைசேர்ந்தவர்களுக்கு உணவு அளிக்கப்பட்டது. தாகசாந்தியும் அளிக்கப்பட்டது.

### இ. போ. ச. சேவை

கப்பலிலிருந்து வந்தவர்களின் பெயர் விலாசம் பதியப்பட்டு உடனுக்குடன் ஒலிபெருக்கியில் அறிவிக்கப்பட்டது உறவினர்கள் அவர்களைச் சந்தித்து அழைத்துச் செல்வதற்கு வசதியாக இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அகதிகளாக வந்தவர்களை அவரவர் சொந்த இடங்களுக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பதில் இலங்கைப் போக்குவரத்துச்சபை ஊழியர்கன் மிகச் சிறப்பாகப் பணி புரிந்தனர்.

### தொடர்ந்து வரும் அகதிகள்

பல இடங்களிலிருந்தும் தமிழ்மக்கள் அகதிகளாக யாழ்ப்பாணத்துக்குத் தொடரீந்து வந்துகொண்டிருக்கிறார்கள்.

### வர்த்தகர்களுக்கு கோரிக்கை

"யாழ். நகர் வர்த்தகர்கள் சிலர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அத்தியாவசிய பாவனைப் பொருட்களில் கொள்ளைலாபமடிப்பதை நிறுத்தி, நியாய விலைகளில் பொருட்களை வழங்க வேண்டும்" என்று யாழ்ப்பாணத்தொகுதி தேசியப்பேரவை உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரன், வர்த்தகர்களை கோரியுள்ளார்.

"இலங்கையின் பல பாகங்களில் பாதிக்கப்பட்ட தமிழர்கள் யாழ்நகர்நோக்கி குவிந்தவண்ணம் இருக்கின்றனர். இவர்களுக்கு யாழ்நகர் மக்கள் மிகுந்த ஆதரவளித்து உணவு, உடை அளித்து பராமரித்து வருகின்றனர். இக்கட்டான கவலை மிகுந்த நேரத்தில் தம்து தமிழினத்தின் இன்னல்களைக்களைய ஒவ்வொரு தமிழனும் ஆவலுடன் சேவையாற்றும்போது, சில யாழ். வர்த்தகர்கள், கொள்ளைலாபமடிக்கமுயல்வது மனிதாபிமானத்துக்கு இழுக்கான செயலாகும், இப்பஞயான நேரத்தில் வர்த்தகர்கள் நியாயமான முறையில், விலையேற்றுமல், நீதியானமுறையில் வர்த்தகம் புரியவேண்டும்' என்று திரு. வெ. யோகேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். (செ)

### ரயிலிலும் விமானத்திலும்

கொழும்பிலிருந்து நேற்று கப்பல்களில் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த சுமார் இரண்டாயிரம் அகதிகள் தவிர டி. சி. 3 என்ற ஜெட் விமானம் ஒரு தடவைக்கு 170 பேர் வீதம் ஐந்து தடவைகள் தமிழ் அகதிகளைக் கொண்டுவந்திறக்கியது. எயர்சிலோன் வழமையான சேவையிலீடுபடும் விமானமும் நேற்று ஒரு தடவைக்கு 40 பிரயாணிகள் வீதம் பத்து தடவைகள் அகதிகளைக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறது. கப்பல் விமானங்களுடன் நேற்றுக் கொழும்பிலிருந்து காலையில் புறப்பட்ட உத்தரதேவி கடுகதி புகையிரதத்திலும் அதைத் தொடர்ந்து கோட்டையிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்ட விசேஷ நேரடி ரயிலிலும் இரண்டாயிரத்துக்கு மேற்பட்டோர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

## யாழ். திரும்புகிறவர்களுக்கு இலவச விமானசேவை

கொழும்பு, வெள்ளி

கொழும்பில் அகதிகளாகவுள்ள தமிழ் மக்களை விமான மூலம் இலவசமாக யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லுமாறு பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன ஏயர் சிலோன் நிறுவனத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவுக்கிணங்க நேற்று பெரும் பாலான தமிழ் அகதிகள் தமது சொந்தஇடங்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

ஏற்கனவே விமானச் சீட்டுக்களை பதிவு செய்தவர்களுக்கான கட்டணப்பணம் திரும்பவும் வழங்க முடிவுசெய்துள்ளது. (இ)

## சந்தர்ப்பவாதிகளுக்கு இடமளிக்கவேண்டாம்

பாதிக்கப்பட்ட தமிழ் அகதிகளுக்காக எந்தவொரு தனிநபரும், பொது நிறுவனமும் நிதி சேர்க்கவோ, உணவு உடை சேகரிப்பதற்கோ, 'தமிழர் புனருத்தாரணசபை" அதிகாரமளிக்கவில்லை. அப்படி தனி நபர்கள் எவரும் இந்த முயற்சியில் இறங்கி, சில சந்தர்ப்பவாதிகளுக்குச் சந்தர்ப்பம் அளிக்காமல் இச்சபையின் பொறுப்புவாய்ந்த அதிகாரியின் அனுமதியைப் பெறுமாறு சமூகசேவை உதவி அத்தியட்சகர் திரு. கெங்காதரன் கேட்டுள்ளார்.

உணவு, உடை பொறுப்பாளராக வண. பிஷப் ஜே. ஜே. ஞானப்பிரகாசம் (பரியோவான் கல்லூரி, சுண்டிக்குளி), வண. எம். ஏ. இரத்தினராஜா (றிம்மர் மண்டபம், யாழ்ப்பாணம்) என்பவர்களுடனும், நிதிக்கு பொறுப்பாக திரு லங்கா நேசையா (வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம்), திரு. ஆர். ரி. குணறெட்

(3-ம் பக்கம் பார்க்க)

### குடியிருப்பும் வேலைவாய்ப்பும்

தமிழர் நலன்புரி இயக்கம் அகதிகளாக இங்கு வந்துள்ளோரில் ஒரு பகுதியினரை தமது பொறுப்பில் எடுத்து அவர்களுக்குரிய எதிர்காலத்தை அமைக்க முன்வந்துள்ளது. பரந்தன், நெடுங்குளம் போன்ற பகுதிகளில் அவர்களை குடியேற்றி அவர்களுக்கு விவசாயம், நெசவு ஆகிய தொழில்களை ஏற்பாடுசெய்து வழங்கவுள்ளது. பொதுமக்களின் உதவிகளுடனும் மற்றும் பிற சங்கங்களின் உதவிகளுடனும் தம்மால் இயன்றவற்றை சிறந்த முறையில் செய்து அகதிகளாக வந்தவர்களுக்கு சிறந்ததோர் எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்க இந்த இயக்கம் திட்டமிட்டுள்ளதாம்.

இது சம்பந்தமாக தமிழர் நலன்புரி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் கூட்டணி எம். பிக்களுடன் ஆலோசனை நடத்த உள்ளனர் இது சம்பந்தமாக நாளை மறுதினம் ஒரு கூட்டம் நடைபெறவிருக்கிறது.

—

### கைதவறிய 'சூட்கேஸ்"

யாழ்ப்பாணம், சனி

கொழும்பிலிருந்து அகதிகளாக நேற்று காங்கேசன்துறை முகத்துக்கு கப்பலில் வந்தவர்களில் ஒரு இளம் குடும்பத்தினர், தங்களின் ஒரு 'சூட்கேஸ்' கப்பலிலேயே கைதவறிவிட்டதாகத் தெரிவித்துள்ளனர். இதில் பெறுமதி வாய்ந்த பொருள்கள் இருந்தனவாம்.

யாழ். கலவர மரண விசாரணை:

# கண்ணீர்ப்புகைப்படையும் கலவரஇடத்திற்குச்சென்றது

## உதவிப் பொலிஸ் அதிபர் சாட்சியம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்து நகர வீதிகளில், பெருந்தொகையானமக்கள் திரண்டு நிற்பது சாதாரண விஷயம்

யாழ்ப்பாணம் கலவரத்தில் பலியான மூவர்களின் மரண விசாரணையில் சாட்சியமளித்த யாழ்ப்பாண உதவிப்பொலிஸ் அதிபர் திரு ஏ எச். நூர்டீன் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான் திரு கே. வி. நவரத்தினம் முன்னிலையில் இம்மரண விசாரணை நடைபெற்றுவருகிறது.

நீதவான்: நீர் முதன்முதலில் பழைய சந்தையைப் பார்த்த போது சந்தை எரிந்துகொண்டிருந்தது! - ஆம்.

நீத: என்ன நடந்ததென்று உமக்குத் தெரியாது?- தெரியாது.

நீத: பழைய மார்க்கெட்டில் தீ எப்போது பிடித்திருக்கும் என்பதைக் கூறமுடியுமா?- நான் அவ்விடத்திற்குப் போவதற்கு சற்றுமுன்பு பிடித்தது போல காட்சியளித்தது.

நீத: அந்தநேரத்தில் கூட்டத்தினர் பொருட்களை க்கொள்ளையடித்துச் சென்றதைக் கண்டீரா? நான் வெகு வேகமாகச் சென்றதால் அவற்றைக் கவனிக்கவில்லை.

நீத: கூட்டத்தினர் பெருந்திரளாக நிற்பது அசாதாரணமானது? ஆம்.

நீத: தீவைப்பு, கொள்ளையடிப்பு சம்பவங்கள் வேறுசம்பவத்தின் பிரதிபலிப்பாக இருந்திருக்கும் என்று கருதுகிறீரா? அதைப்பற்றி எனக்குத் தெரியாது.

நீத: பொலிஸ் நிலையத்திற்கு நீர் ரேடியோ செய்தியைத் தொடர்ந்து சென்றீர்? - ஆம்.

நீத: அங்கு தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டரிடம் ஆயுதப்பொலிஸாரை யாழ். நகரத்திற்கு அனுப்புமாறு கூறினீர்? ஆம்.

நீத! யாழ் நகர் வீதியிலிருந்த கூட்டத்தினர் ஆர்ப்பாட்டக்காரரா அல்லது கொள்ளையடிக்கும் நோக்குள்ளவர்களா? -எனக்குத் தெரியாது.

நீத: தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டருக்கு நீர் சொன்னபோது அவருக்கு பெரியகடைச் சம்பவம்பற்றி ஏதாவது கூறினீரா?- இல்லை.

நீத! சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்றபோது, எவரும் கொள்ளை பற்றி உமக்குப் புகார் செய்யவில்லை?- -இல்லை.

நீத: கண்ணீர்ப் புகை படை அங்கு இருக்கிறதா?- இருக்கிறது.

நீத! கண்ணீர்ப் புகைப் படை ஏன் கலவரம் நடந்த இடத்திற்கு செல்வில்லை?- கண்ணீர்ப்புகைப் படையும் சென்றது. கண்ணீர்ப்புகைப் படை தனியாக உள்ளது.

நீத: எந்தப்படை முதலில் சென்றது?- எனக்குத் தெரியாது.

நீத: எதற்காக ஆயுதப் படையை அனுப்புமாறு கூறினீர்? துப்பாக்கிப்படையும் அவசியமாக இருந்தது.

நீத: நீர் ஏன் செல்லவில்லை?- நான் அவர்களுக்குப் பின்னல் தொடர்ந்துசென்றேன்.

நீத: தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் உமது பணிப்பின்படி நடந்துகொண்டாரா?-ஆம்.

நீத: கலவரப்பகுதியில் பொலிஸார் நிரந்தரமாகக் காவல் செய்யவில்லையா?- அது பாதுகாப்பற்றதாக இருந்தது. பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டார்கள்.

நீத: எத்தனை மணிவரை பொலிஸார் பஸ் நிலையத்தில் கடைமைபுரிந்தார்கள்?- காலை 8-30 மணி முதல் 1 மணி வரை.

நீத; பொலிஸ் அதிபர் பஸ் நிலையத்திற்கு வரவில்லையா? பிற்பகல் 2 மணிக்கு வந்தார். அவருடன் பொலிஸ் மா அதிபரும், இராணுவ தளபதியும் வந்தனர்.

சட்டத்தரணி எஸ் நடராசா நீதவான் மூலம் கேட்ட கேள்விகளுக்கு உதவிப் பொலிஸ் அதிபர் திரு. நூர்டீன் பதிலளித்கார்.

நீத: சம்பவம் நடந்த இடத்தில் எத்தனை பொலிசார் கடமையாற்றினுர்கள்?- 2 பிரிவினர் மொத்தம் 14 பேர் கடமையாற்றினுர்கள், இராமநாயக்கா தலைமையில் மற்றொரு கண்ணீர்ப் புகைப்படையும் கடமையாற்றியது.

நீத; காலை 8-30 மணி முதல் 1 மணிவரை எத்தனை பொலிசார் கடமை புரிந்தனர்? 25 பொலிஸார்.

நீத: கண்ணீர்ப் புகைப் படையில் எத்தனை பேர்? ஒரு இன்ஸ்பெக்டரும் ஆறு கான்ஸ்டபிள்களும்.

நீத: அங்கு நின்றவர்களில் பெரும்பாலான பொலிஸாருக்கு நம்பர் இல்லை என்பதுபற்றி உமக்குத் தெரியுமா? -எனக்குத் தெரியாது.

நீத; மற்றைய பொலிஸார் பற்றித் தெரியுமா? -சிலர் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றினுர்கள். மற்றும் சிலர் வேறு கடமைகளுக்குச் சென்றிருந்தனர்

நீத: சில பொலிஸார் அன்று கடமை செய்யாமல் ஓய்வாகவும் இருந்தார்கள்? -இருந்திருக்கலாம்.

நீத: எத்தனை பேர் கடமை செய்யாமல் ஓய்வாக இருந்தார்கள் என்று உமக்குத் தெரியுமா?-தெரியாது

நீத: அவர்கள் பஸ் நிலையத்திற்குப் போனது பற்றி தெரியுமா? -தெரியாது.

இறந்தவர்களின் நலனைக் கவனிக்கச் சட்டத்தரணிகள் எஸ். நடராசா, ஆர். விஸ்வநாதன், ஜிம்மி ராஜரத்தினம், த. சோமசுந்தரம், ஏ. அன்ரனி, எஸ். லோகேஸ்வரன், வி. வரதராசா, சிவா. கணேசன் ஆகியோர் ஆஜராணுர்கள்.

பொலிஸ் தரப்பில் உதவிப் பொலிஸ் அதிபர் திரு. சில்வா ஆஜராஞர்.

விசாரணை இம்மாதம் 29-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (க)

## பாடசாலைகள் யாவும் செப். 5-ல் திறக்கப்படும்?

யாழ்ப்பாணம், சனி

இம்மாதம் 29-ம் திகதி ஆரம்பமாகும் பாடசாலைகள் அநேகமாக ஒரு வாரம் கழித்தே மீண்டும் திறக்கப்படலாம் எனத் தெரியவருகிறது.

பல பாடசாலைகள் இப்பொழுது 'அகதிகள் முகாம்'களாக மாற்றப்பட்டிருப்பதாலேயே பாடசாலைகளைத் திறக்கும் திகதிகளில் மாற்றம் ஏற்படுகிறதெனத் தெரியவருகிறது.

பாடசாலைகள் மீண்டும் அடுத்த மாதம் ஐந்தாம் திகதி திறக்கப்படலாம் என்று நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

## 3,000 பேர் கைது!

கொழும்பு, வெள்ளி

நாடு முழுவதிலும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக இதுவரை 3 ஆயிரம் பேர் கைதுசெய்யப்பட்டனர்.

கொழும்பில் 750 பேரும், கண்டியில் 650 பேரும், அனுராதபுரத்தில் 600 பேரும் கைதுசெய்து காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மாத்தறை, காலி ஆகிய இடங்களிலும் அநேகர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (இ)

## நிவாரண உதவி

கொழும்பு, வெள்ளி

கொழும்பில் அகதிகளாகத் தங்கிநின்ற தமிழ்மக்களை கப்பலில் ஏற்றி வடபகுதிக்குக் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளில் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர்கள் திருவாளர்கள் ஏ. அமிர்தலிங்கம், எம். சிவசிதம்பரம் ஆகியோருடன் ஊர்காவற்றுறைத் தொகுதி ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர் திரு. எம். அமிர்தலிங்கமும் ஈடுபட்டிருந்தார்.

உடைமைகள் இழந்தோர் தம்முடன் 383, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடர்பு கொண்டால் பிரதமருடன் தொடர்பு கொண்டு இயன்றளவு நிவாரண உதவி பெற்றுத்தர முயற்சிப்பதாகவும் திரு எம் அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார். (உ)

## கோப்பாய் முகாமில் 80 அகதிகள்

யாழ்ப்பாணம், சனி

கோப்பாய் ஆசிரியபயிற்சிக் கலாசாலை முகாமில் சுமார் 80 பேர் அகதிகளாகத் தங்கியிருக்கிறுர்கள். இவர்கள் அனைவரும் அநுராதபுரத்தைச் சேர்ந்தவர்களே.

இவர்களுக்கான உணவு, உடை முதலிய உடனடித் தேவைகளை கலாசாலை அதிபர் திருமதி ம. ஆனந்தக்குமாரசுவாமி பொதுமக்களின் ஆதரவுடன் கவனித்து வருகிறுர். நல்லூர் ப. நோ. கூ. சங்க ஊழியர்கள் விறகு மற்றும் பலபொருள்களை பெருமளவில் அளித்திருக்கிறுர்கள். கோப்பாய் வைத்திய அதிகாரி டாக்டர் கே. மகாதேவன் வைத்திய உதவிகளைக் கவனித்து வருகிறுர்.

இவர்களுக்கான புனர்வாழ்வுக்கு உதவக்கூடிய விதத்திலும் திருமதி குமாரசுவாமி சில திட்டங்களை வகுத்துள்ளார். பொதுமக்களின் உதவியையும் இவர் நாடுகிறுர். (ம)

## வீரர்களுக்கு 5 ரூபா விசேஷ படி

கொழும்பு, வெள்ளி

தற்போது பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் சகல ஆயுதப்படை வீரர்களுக்கும் நாள் ஒன்றுக்கு 5 ரூபா விசேஷ படியாக வழங்கும்படி பிரதம மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பணித்துள்ளார்

## பன்சிலால் பிணையில் விடுதலை

புதுடில்லி, ஆக. 26

காவலில்வைக்கப்பட்டிருந்த முன்னுள் இந்திய மத்திய மந்திரி திரு. பன்சிலால் 30 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள இவருக்கு கூடிய இரத்த அழுத்தமும் ஆஸ்மாவும் இருக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டது. இவருக்குப் பிராணவாயுவும் செலுத்தப்பட்டது.

திரு பன்சிலால் அமைதியின்றிக் காணப்பட்டார் என வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

ஹரியாஞ இளைஞர் காங்கிரஸ் நிதியை மோசடி செய்ததாக இவர் கைதாகி 5-ம் திகதிவரை காவலில் வைக்க உத்தரவிடப்பட்டிருந்தார். (உ)

சீனசார்பு

## கம். கட்சி வேண்டுகோள்

யாழ்ப்பாணம், சனி

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வடபகுதிக்கு வந்து சேர்ந்து கொண்டிருக்கும் அகதிகளுக்கு சகல வித உதவிகளையும் செய்யுமாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சீனசார்பு) கட்சியின் வடபிரதேசக் கமிட்டி தனது வாலிபர் சங்கங்கள் அனைத்துக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேசக் கமிட்டியின் சார்பில் திரு. கே. ஏ. சுப்பிரமணியம் விடுத்துள்ள மேற்படி வேண்டுகோளில் அகதிகளுக்கான தங்கு வசதி, உணவு, உடை, போக்குவரத்து வசதிகள் போன்ற சகலவித உதவிகளையும் செய்து ஆதரிக்குமாறு கேட்டுள்ளார்.


வலி-கிழக்குதென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்

வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திர அறிவித்தல்

ஷை சங்கத்தில் 7500 வெற்றுச்சாக்குகள்வரை கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்கு இருக்கின்றன. 07-09-77 புதன்கிழமை நண்பகல் 12-00மணிவரை கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்களை 05-9-77 திங்கட்கிழமைவரை ஷை சங்கக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திர விண்ணப்பப் படிவத்திற்கு ரூபா 1/-ம் வைப்புப்பணமாக ரூபா 250/-ம் செலுத்தவேண்டும்.

மேலதிக நிபந்தனைகளையும் விபரங்களையும் ஷை சங்கக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். எல்லாக் கேள்விப்பத்திரங்களும் பொது முகாமையாளர்க்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்புதல் வேண்டும். எக்கேள்விப்பத்திரமும் சங்கத்தால் நிராகரிப்பதற்கு உரிமையுண்டு. தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் 'வெற்றுச்சாக்குகளுக்கான கேள்வி விண்ணப்பம்' என எழுதப்படல்வேண்டும்.

பொதுமுகாமையாளர்.
நீர்வேலி,
1977-8-25. 6897

School of Accountancy
57, ஆஸ்பத்திரிவீதி
கொட்டடி
யாழ்ப்பாணம்
G. C. E. (O/L, A/L)
N. C. G. E., H N. C. E.
வகுப்புக்கள் 29-8-77 திங்கள் அன்று வழமைபோல் ஆரம்பமாகும். பட்டதாரி, பட்டயகணக்காளர் வகுப்புக்கள் 3-9-77 அன்று ஆரம்பமாகும்.
நிருவாகி
6896

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

கோட்டு விற்பனவு விளம்பரம்
மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்
MB/1011
(1) சின்னப்பு செல்லத்துரையும் பெண்
(2) சிவபாக்கியமும், சுளிபுரம்.
—வழக்காளிகள்
எதிராக
முருகர் முத்தையா கைம்பெண்
பாக்கியம், சுழிபுரம்.
—எதிராளி

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டில் MB 1011-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1977-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 27-ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி (27-9-77) தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை

மேற்குறித்த எதிராளி குறித்த வழக்காளிகளுக்கு ரூபா 3955/- மேலும் ரூபா 2500/-க்கு 26-11-1975ம் திகதி தொடக்கம் 30-7-1976 வரையும் 9 வீத வட்டியும் அதன்பின் தீர்வை முழுத் தொகைக்கும் முழுவதும் கொடுக்கப்படும் வரை 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 524-25 கொடுக்க வேண்டியிருப்பதாலும்.

ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி சங்கானைக் கோவிற்பற்று சுளிபுரம் இறை ''கயட்டியவத்தை'' நிலப்பரப்பு மூன்றரையும் (பர நில. இலா 3 1/2) பனையும் எல்லைகிழக்கு இராமலிங்கம் பெண் வள்ளியம்மைக்குரிய காணி வடக்கும் மேற்கும் ஒழுங்கை. தெற்கு சபாபதி சின்னத்துரைக்குரிய காணி இது அடங்கலும் தெற்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்.

சி. செ. பாலசிங்கம்
(கொமிஷனரும் விலைமதிப்பாளரும்)
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை,
23-8-77. 6898

# யாழ்ப்பாணமே தெரியாதவர்கள் அகதி முகாம்களில் தஞ்சம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் உள்ள அகதிகள்முகாமில் யாழ்ப்பாணத்தையே முன்பின் அறியாத 182 அகதிகள் தங்கியிருக்கிறார்கள். இதேபோல் கோப்பாயிலும், கொழும்புத்துறையிலும் உள்ள அகதிகள் முகாமில், பல குடும்பங்கள் தங்கியிருக்கின்றன.

யாழ் இந்துக்கல்லூரி அகதிகள் முகாமில்தங்கியுள்ள அகதிகளில், ஒருசிலர் மட்டுமே இலங்கைத் தமிழர்கள் மற்றையோர் யாவரும் இந்தியத் தமிழர்களே.

சிங்களப்பெண்ணை மணம் முடித்த இலங்கைத்தமிழர் ஒருவரும், மனைவியையும், பிள்ளைகளையும் பிரிந்து அகதிகளாக வந்திருக்கிறார்.

சில கர்ப்பிணிகளும், கைக்குழந்தைகளுடன் கூடிய பெண்களும், வயோதிபர்களும் கூட அகதிகளாக வந்துள்ளனர். இவர்களில் பலர் விவசாயம் செய்வதையே தொழிலாகக் கொண்டவர்களாகும்.

மற்றொரு வயோதிபர், மனைவி, பிள்ளைகளையும்இழந்து வந்துள்ளார். அவர்கள்வழியில் வேறுபாதையால் சென்றுவிட்டதாக கண்ணீர் விட்டபடி கூறினார்

இவர்கள் அநுராதபுரம், கேகாலை, மாகோ, பியாந்தலை, குருநாகல், பொல்காவலை பகுதிகளில்நிரந்தரமாகவசித்து வந்தவர்களாகும்.

மீண்டும் ஊருக்கு போக விரும்புகிறீர்களா? என ஒருவரிடம் கேட்டபோது, எங்களை போகச்சொன்னால் கடலுக்குள்தான் போய்விழுவோம் என்றார். பாடுபட்டு உழைத்து சேர்த்த பொருட்கள் எல்லாவற்றையும் கொள்ளையடித்து விட்டார்கள் என்று கூறியஒரு வாலிபர், மீண்டும்அங்குபோய் உழைத்து பொருட்களை சேகரிக்க, மீண்டும் ஒருகலவரம்வர மீண்டும்நாம்இங்குவரவேண்டிவரும் என்று கூறி, யாழ்ப்பாணத்திலேயே தங்கப்போவதாகக் கூறினார்.

பல வர்த்தக ஸ்தாபனங்களும், தனிப்பட்ட நபர்களும், மூடைமூடையாக அரிசியும் மற்றும் உணவு வகைகள். வாழைக்குலைகள் கொண்டுவந்து வழங்குகிறார்கள். அகதிகள் முகாமிற்கு வழங்கப்படும் பொருட்கள் யாவும் அங்குள்ள பொறுப்பதிகாரியால் பதியப்பட்டுவருகிறது.

அகதிகளில் அநேகர் உடுத்த உடையுடனேயே வந்துள்ளார்கள். இவர்களுக்கு மக்கள் பாவித்த உடைகளை பெருந்தொகையாக வழங்கிவருகிறார்கள். அகதிகள் ஒவ்வொருவருக்கும் உடைகள் வழங்கப்படுகிறது.

கொக்குவில் இந்துக் கல்லூரி சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் குழுவினரின் சிகிச்சை நிலையம் ஒன்றும், அகதிகள் முகாமில் அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் எம். பி. திரு. வே. யோகேஸ்வரன், வண்ணை ஆனந்தன், சட்டத்தரணி ஆர். விஸ்வநாதன் ஆகியோர் அகதிகள் முகாமிற்கு வந்து பார்வையிட்டு, தேவையான உதவிகளை செய்தனர்.

அகதிகள் முகாமில் தங்கியுள்ள 182 அகதிகளையும், கிளிநொச்சியில் அல்லது வவனியாவில் நிரந்தரமாக குடியேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகவும், அதுவரை அவர்கள், அகதிகள் முகாமிலேயே இருப்பார்கள் என்றும், பொறுப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

சாரணர்களும், தொண்டர்களும், அகதிகள் முகாமில் கடமையாற்றிவருகிறார்கள்.

கிளிநொச்சியில் தங்கியிருக்கும், அகதிகளில் ஒரு பகுதியினர் இன்று இம்முகாமிற்கு வருவார்களென்றும் பொறுப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

(க)

## இன்று தேர்

யாழ்ப்பாணம், சனி

தொண்டமானாறு செல்லச் சந்நிதி ஆலயத் தேர் உற்சவம் இன்று. நாளை தீர்த்தம் இடம் பெறும். (கெ)

## தொடர்பு கொள்ளவும்

யாழ்ப்பாணம், சனி

கண்டியிலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வந்த பஸ்ஸில் தவற விடப்பட்ட பேராதனை வளாக மருத்துவபீட மாணவர்கள் இருவரின் பாடப்புத்தகக் குறிப்புக்கள், அறிமுக அட்டை ஆகியன அடங்கிய இரு சூட்கேஸ்களைக் கண்டெடுத்தவர்கள் 'ஈழநாடு' காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

## மரணவிசாரணை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தில் நடந்த கலவரத்தில் பலியானவர்களின் மரணவிசாரணையில் உதவிப் பொலிஸ் அதிபர் திரு. என் எச். நூர்டின் சாட்சியமளிக்கையில், "நான் பாவிக்கப்பட்ட துப்பாக்கிகளை பரிசோதனை செய்தேன். அவைகள் பாவிக்கப்பட்டிருந்தன" என்று கூறியிருந்தேன்

நேற்றைய 'ஈழநாட்டில்' "நான் பாவிக்கப்பட்ட துப்பாக்கிகளைப் பரிசோதனை செய்தேன். அவைகளைப் பாவிக்கப்படாமலிருந்தன" என வெளிவந்தது தவறானதாகும். (க)

## வவனியாவில்

## தீ, கொள்ளைகளில் 14 கிராமங்கள் பாதிப்பு

வவுனியா, வெள்ளி

வவுனியா மாவட்டத்தில் உள்ள 14 கிராமங்கள் தீவைத்துக் கொள்ளையடிக்கப்பட்டதால், இக்கிராமங்களில் உள்ள நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள், பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளன.

நூற்றுக்கு மேற்பட்ட வீடுகள் முற்றாக எரிந்துவிட்டதாகவும், பல வீடுகள் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.

மகாரம்பைக்குளம், கேயாடிகுடளாம்குளம், காத்தசின்னக்குளம், மாமடுவ, கறுவல்புளியங்குளம், எலிக்குளம், சின்னப்புதுக்குளம், தச்சன்குளம், மூன்றுமுறிப்பு, சின்னகோயில்குளம், தோணிக்கல், கல்நாட்டினகுளம், ஆசிக்குளம், விமண்கல்லு ஆகிய 14 கிராமங்களும் தீவைத்துக் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

மற்றும் கிராமங்களைச் சேர்ந்த பல குடும்பங்கள் கார்களிலும், லொறிகளிலும், டிரக்டர்களிலும்குடிபெயர்ந்து யாழ்ப்பாணம் சென்றுகொண்டிருக்கின்றனர்.

இங்கு வசித்துவந்த யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த பலகுடும்பங்களும் யாழ்ப்பாணம்சென்றுள்ளன.

இம்மாதம் 21ம்தேதி கலவரத்தைத் தொடர்ந்து பாதுகாப்புப் பொறுப்பை, பொலிஸாரிடமிருந்து இராணுவத்தினர் பொறுப்பேற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

பொலிஸாரைத் தவிர்ந்த வேறு ஒரு அதிகாரியைத் தங்கள் புகார்களைப் பதிவு செய்ய நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு வர்த்தகர்களும், பாதிக்கப்பட்ட மக்களும் வவுனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரத்திடமும், இராணுவ அதிகாரிகளிடமும் கோரியுள்ளனர்.

வடபகுதியிலிருந்துவரும் சிங்கள அகதிகளை, தென்பகுதிக்கு அனுப்புவதிலும், தென்பகுதியிலிருந்துவரும் தமிழ் அகதிகளை வடபகுதிக்கு அனுப்புவதிலும் வவுனியாவிலுள்ள பொதுமக்கள் ஈடுபட்டுள்ளனர்.

தென்னிலங்கையிலிருந்து வந்த 2500 அகதிகள் பாதுகாப்புடன், கிளிநொச்சியிலுள்ள முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

## ஆசிரியர்களுக்கு 60 வீத சம்பளம்

யாழ்ப்பாணம், சனி

வெளி மாவட்டங்களில் சேவையாற்றிய ஆசிரியர்கள் நாட்டில் நடைபெற்ற அசம்பாவிதங்களால் திரும்பவும் கடமைக்கு செல்லாமல், கஷ்டமுறும் ஆசிரியர்களுக்கு. இம்மாத வேதனத்தில் அறுபது வீதத்துக்கு, மேற்படாத தொகையை யாழ் கல்வித் திணைக்களத்தில் வழங்கவும் அவர்களுடைய வரவை பதிவதற்கும், ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. இதுவிடயமாக, இலங்கைத் தமிழ் ஆசிரிய சங்கக்குழு யாழ் மாவட்ட இணைப்பதிகாரி திரு. ருத்ரா. இராஜசிங்கத்துடனும், யாழ் கல்விப்பணிப்பாளர் திரு க. சிவநாதனையும் சந்தித்து இம்முடிவை யெடுத்துள்ளனர். இதற்கான அவசரவேண்டுகோள் கல்வியமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

வெளிமாவட்ட ஆசிரியர்களின் முழுவிபரங்களையும் சேகரிப்பதற்கான அவசர கூட்டமொன்று 29ம் திகதி திங்கட்கிழமை காலை, யாழ் நல்லூர் சாதனா சீ. சீ. பாடசாலையில் நடைபெறவுள்ளது சகல ஆசிரியர்களும், தவறாமல் கூட்டத்தில் கலந்து தமது விபரங்களைத் தருமாறு இலங்கை தமிழ் ஆசிரிய சங்கம் கோரியுள்ளது.

தூதுக்குழுவில், இலங்கைத் தமிழ் ஆசிரியசங்க பொதுச் செயலாளர் திரு. ந. பாலசுப்பிரமணியம், நிர்வாகச் செயலாளர். திரு அ. பொன்னம்பலம். நிதிச்செயலாளர், திரு. அ. நடராசா, யாழ். மாவட்ட செயலாளர் திரு. சி. பாலசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (கெ)

## மோசமான வதந்தியே வன்முறைக்குக் காரணம்

### வர்த்தக ஊழியர் சங்கம் கருத்து

கொழும்பு, வெள்ளி

தற்போதைய வன்முறைச் சம்பவங்களுக்கு வதந்திகள் மோசமான விகத்தில் பாவியதே காரணம் என்று இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் பொதுச்சபை கருதுகிறது.

கடந்த செவ்வாயன்று நடந்த மேற்படி பொதுச்சபைக் கூட்டத்தில் பின்வரும் இரண்டு அம்சங்களும், பொய் வதந்திகளே என்பதில் அங்கத்தவர்கள் ஒருமித்த கருத்து உடையவர்களாகக் காணப்பட்டனர்.

யாழ். வளாக சிங்கள மாணவர்கள் கொல்லப்பட்டார்கள் என்பது ஒன்று, மற்றது மகரகமையைச் சேர்ந்தவரான பண்டார என்ற பொலிஸ்காரர் கொல்லப்பட்டார் என்பதாகும்.

இந்தச்செய்தியை பொலிஸ் மாஅதிபர் மறுத்துள்ளதுடன் சம்பந்தப்பட்ட பொலிஸ்காரர் காயமடைந்துள்ளதாகவே தெரிவித்துள்ளார்.

மேற்படி கூட்டத்திற்கு வருகை தந்திருந்த யாழ் வளாகத்தைச்சேர்ந்த இரண்டு மாணவர்கள், யாழ். வளாக மாணவர்கள் எவரும் தாக்கப்படவோ காயப்படுத்தப்படவோ இல்லை என்பதை உறுதிப்படுத்தினர்.

யாழ். வளாகத்தில் விடுதி வசதிகள் இல்லாமையால் சிங்கள மாணவர்கள் எல்லோரும் தமிழ்வீடுகளிலேயே தங்கியிருந்தார்கள் என்று அவர்கள் தெரிவித்தனர்.

இப்போதைய நெருக்கடி 58ம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரம் போன்றதல்ல என்று இச்சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. பாலாதம்பு தெரிவித்துள்ளார். (இ)

## பழுதாகும் பொருள்களை வழங்க வேண்டாம்

யாழ்ப்பாணம், சனி

சிங்களப் பகுதிகளிலிருந்து திரும்பி, அகதி முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு பொருட்கள் வழங்குகிறவர்கள் முகாம்களில் முன்கூட்டியே என்னென்ன பொருட்கள் தேவைப்படுகின்றனவென்று தெரிந்து கொண்டபின் அவைகளைக் கொண்டுவந்து தந்தால் உபயோகமாக இருக்குமென்றும் அகதி முகாம்களில் பணி புரியும் ஒரு பெண்மணி கூறினார்.

விரைவில் பழுதாகிப்போகக் கூடிய பொருட்களைச் சிலர் கொண்டுவந்து தருகிறார்கள் என்றும் அவை அகதிகளுக்குப் பயன்படாமற்போய்விடுவதாகவும் அவர் கூறினார்.

இளநீர்க் குலைகளைப் பலர் கொண்டுவருவதாகவும் இவை பெருமளவில் தேவைப்படவில்லையென்றும், இவ்வாறு இளநீர்க் குலைகளை வெட்டுவதால் எதிர்காலத்தில் தேங்காய்க்குப் பஞ்சம் ஏற்பட்டுவிடுமென்றும் அகதிகளுக்கான பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களில் ஒருவரான திருமதி அருணாசலம் தெரிவித்தார் தேவைப்படும் பொருட்களை முன்கூட்டியே தெரிந்து கொண்டபின் அவைகளைக் கொண்டுவந்து தருவதே பயன் தருவதாயிருக்குமென்றும் அவர் சொன்னார்.

## வவுனியாவில் நடந்த அட்டூழியம்!

வவுனியா, வெள்ளி

வவுனியாவில் நடந்த கலவரத்தில் 15 பெரிய கடைகளும், மார்க்கட்டுக்கு அருகிலுள்ள சிறுகடைகளும் கொள்ளையடிக்கப்பட்டதுடன் சேதப்படுத்தப்பட்டன

மாமடுவ உப தபால் நிலையம் முற்றாக சேதப்படுத்தப்பட்டதுடன் உப-தபால் நிலைய அதிபரின் இல்லமும் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

உப-தபால் நிலைய அதிபரின் மகனும், மாமனாரும் பலத்த காயங்களுடன் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். துப்பாக்கிச் சூடு, கத்திக்குத்துக் காயம், வெட்டுக்காயங்களுடன் ஐவர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவங்களைத் தொடர்ந்து அச்சமடைந்த மக்கள் பலர் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளனர். (க)

## இவருக்கு உதவ முடியுமா?

இரத்மலானையைச் சேர்ந்த திரு அலெக்சாந்தர் அரசநிலை (வயது 29) தமது தாய் தந்தை இருசகோதரிகளை தவறவிட்டு, யாழ். கனகரெத்தினம் மகா வித்தியாலயத்தில் அமைந்திருக்கும் அகதிகள் முகாமில் தங்கியுள்ளார் இவர் முன்பின் யாழ்ப்பாணம் தெரியாததால், அகதியாக யாழ்ப்பாணம் வந்த சமயம், தாய், தந்தையரை இழந்துள்ளார்.

இவரது தாய், தந்தை, சகோதரிகள், காங்கேசன்துறையில் உள்ள உறவினர் ஒருவர் வீட்டில் தங்கியிருக்கலாமென நம்புகிறார். தகவல் அளிக்க விரும்புவோர் தொலைபேசிஇல 7234 உடன் அல்லது, யாழ். மாவட்ட சமூக சேவை உதவி அத்தியட்சகருடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்படுகின்றனர். (கெ)

## செயலகத்தில் விசாரிக்கலாம்

பாதிக்கப்பட்ட தமிழ்மக்களைப்பற்றி தொடர்புகொள்வதற்கும், விசாரணை செய்வதற்குமாக, யாழ். செயலகத்தில், தனிவிசாரணைப் பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சித் தலைவரும் காங்கேசன்துறை தேசியப் பேரவை உறுப்பினருமான திரு அ. அமிர்தலிங்கம், யாழ் மாவட்ட இணைப்பதிகாரி திரு. ருத்ரா இராஜசிங்கத்தைக் கேட்டுக்கொண்டதன் பேரில் இப்பிரிவு நிறுவப்பட்டது. விடுமுறை நாட்களிலும் இப்பிரிவினருடன் சகல மக்களும் தொடர்பு கொள்ளலாமென அதிகாரி தெரிவித்தார்.

(கெ)

## உணவுப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விசேஷ சலுகையை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். இம்மாதம் 22-ம் திகதி முதல் அடுத்த மாதம் 18-ம் திகதி வரை இச்சலுகையைப் பெறலாம்.

## சந்தர்ப்ப—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணம் (ஜேட்டறி கழக யாழ். தலைவர்) ஆகியோருடன் தொடர்பு கொண்டு செயலாற்றவும் எனவும் தெரிவித்தார். (கெ)

# 'இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டுள்ளோம்'



# எம். ஜி. ஆருக்கு பிரதமர் பதில்!



சென்னை, ஆக. 26

**இலங்கை வாழ் தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய இந்திய அரசு தன்னால் இயன்ற அனைத்தையும் செய்து வருகின்றது என்று இந்தியப் பிரதம மந்திரி திரு. மொரார்ஜிதேசாய் தெரிவித்துள்ளார்.**

தமிழ்நாடு முதல் அமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனுக்கு அனுப்பியுள்ள ஒரு செய்தியில் பிரதமர் திரு. தேசாய் இந்த உறுதிமொழியைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கலவரங்களால் அமைதி குன்றிய இடங்களில் வாழும் தமிழ் மக்களின் நிலைகுறித்து தமிழ்நாட்டு மக்கள் கொண்டிருக்கும் அச்சத்தைத்தாம் உணர்ந்திருப்பதாகவும், அங்கு சகஜநிலையை ஏற்படுத்த இலங்கை அரசுக்கு எல்லா வகையிலும் இந்திய அரசு உதவும் என்றும் இச் செய்தியில் திரு. மொரார்ஜி தேசாய் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்புக்கு தன்னால் இயன்ற வகையில் இந்திய அரசு உதவிவருவதாக தமிழ் நாட்டுமக்களுக்கு உறுதி கூறும்படி தமிழக முதல்வர் திரு. ராமச்சந்திரனை தனது செய்தியில் பாரதப் பிரதமர் கேட்டுள்ளார்.

உணர்ச்சிவசப்படவேண்டிய அவசியமில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் இலங்கை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நிலைமையை அவதானித்து வருவதாகவும், இந்த நிலைமையில் இந்திய அமைச்சர்ஒருவர் இலங்கைக்கு அனுப்பவேண்டிய அவசியமில்லை யென்றும் பிரதமர் திரு. தேசாய் தமிழ் நாடு முதல்வருக்கு அறிவித்துள்ளார்.

## மொரார்ஜிக்கு இந்திய எம். பி.க்கள் கோரிக்கை

புதுடில்லி, ஆக. 26

இலங்கையில் ஏற்பட்ட கலவரங்களினால் பாதிப்படைந்து அவதியுறும் இந்திய வம்சா வழியினரின் உயிருக்கும் அவர்களது உடைமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கும்படி இலங்கைப் பிரதமரிடம் கோருமாறு இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயிடம் இந்திய எம். பி.க்கள் குழு ஒன்று கேட்டுள்ளது.

இக்குழுவில் திருவாளர்கள் உன்னிகிருஷ்ணன், லக்கப்பா, உட்பட 8 எம். பி.க்கள் அங்கம் வகிக்கின்றனர். (இ)

# பி பி ஸி. யில் இலங்கைதமிழர்

(லண்டன்)

இலங்கைத்தமிழர் பற்றிய ஒரு கருத்தரங்கு நேற்று முன்தினம் பி. பி. ஸி. யில் (பிரிட்டிஷ் ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனம்) இடம்பெற்றது.

காலை (இலங்கை நேரப்படி) ஏழுபதினைந்து முதல் ஏழுமணி இருபத்தெட்டு நிமிட நேரம் வரை நடைபெற்ற இக்கருத்தரங்கில் நான்குபேர் கலந்துகொண்டனர்.

பிரிட்டனிடமிருந்து இலங்கை சுதந்திரமடைந்த தன் பின்னர் ஏற்பட்ட நிலை முதல், தமிழர்கள் இன்று ஏன் தனிநாடு கேட்கிறார்கள் என்ற நிலைவரையுள்ள பல்வேறு விஷயங்கள் குறித்தும் இக்கருத்தரங்கில்தெரிவிக்கப்பட்டது. தமிழரசுக்கட்சி 1965-ல் ஐக்கியதேசியக்கட்சியுடன் இணைந்து தேசிய அரசாங்கம் அமைத்ததும், இப்போது பதவிக்கு வந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி தமிழர்களின் பிரச்னைகளைத் தீர்க்க முன்வந்திருப்பதும், தமிழர்களின் பிரச்னைகளைத் தீர்க்கக்கூடிய ஒரு கட்சியாக ஐக்கியதேசியக்கட்சியே தமிழ்மக்களிடையே ஓரளவு நம்பிக்கை பெற்றிருப்பதும், பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன எவ்விதமாக தமிழர் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கப்போகின்றார் என்பதிலேயே நிலையான அமைதி ஏற்பட இடமுண்டென்றும் கருத்தரங்கில் சுட்டிக்காட்டப்பட்டது.

அரசு ஆதரவுடன் தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றம், அரசாங்க உத்தியோகங்களில் மாற்றாந் தாய் மனப்பான்மை போன்ற விஷயங்களில் தமிழ் மக்கள், மனக்கசப்பும், ஏமாற்றமும் அடைந்திருக்கின்றார்கள் என்றும் இக்கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

# ஜனார்த்தனனுக்கு பாரதப் பிரதமர் கடிதம்

(சென்னை)

இலங்கையில் அமைதியை நிலைநாட்ட தன்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொண்டிருப்பதாக இலங்கைப் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறியிருப்பதாக இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் அறிவித்துள்ளார்.

உலகத் தமிழ் இளைஞர் பேரவையின் தலைவர் டாக்டர் ஜனார்த்தனனுக்கு பிரதமர் மொரார்ஜி அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றிலேயே இந்த விபரத்தை பிரதமர் வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் தமிழர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், அவர்களின் உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும், இந்த மனிதாபிமான விஷயத்தில் பாரத அரசு தலையிடவேண்டும் என்றும் டாக்டர் ஜனார்த்தனன் பாரதப் பிரதமரை ஒரு தந்தி மூலம் கேட்டிருந்தார். இதற்குப் பிரதமர் அனுப்பிய பதில் கடிதத்திலேயே மேற்கண்ட விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதமரின் கடிதத்தை டாக்டர் ஜனார்த்தனன் நேற்று சென்னையில் வெளியிட்டார்.

''இலங்கையில் தமிழர்கள் பாதிக்கப்படுவது குறித்து விபரம் அறிய இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதுசம்பந்தமாக பாரத அரசாங்கத்துக்குக்கிடைக்கப்பெற்ற உறுதியின்படி, முப்படைகளினது முழுச்சக்திக்கும் உட்பட்ட எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது என்றும், நாட்டில் அமைதிநிலை நாட்டப்படுமென்றும்இலங்கை அரசு தெரிவித்துள்ளது'' என்று குறிப்பிட்ட பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் 'இலங்கையில் ஏற்பட்டுள்ள சம்பவங்களினால் பாரத மக்கள் கலவரம் அடையத் தேவையில்லை' என்றும் கூறியுள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்டுவரும் அநீதிகளைக் கண்டித்து டாக்டர் ஜனார்த்தனன் இரு தினங்களுக்குமுன்னர் ஒருநாள் உண்ணாவிரதம் இருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.


## ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

வெளிமாவட்ட ஆசிரியர்களின் சம்பளங்களை இங்கு வழங்குதல் வரவு பதிதல் போன்றவை தொடர்பாக யாழ். கல்விப் பணிப்பாளர், இணைப்பு அதிகாரி திரு. ருத்திரா இராஜசிங்கம் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளோம். விபரங்கள் தேவைப்படுகின்றன. வரவு பதியவும், யா/நல்லூர் சாதனா பாடசாலைகளில் நாம் நடத்தும் கூட்டத்தில் பங்கு கொள்ளவும் 29-08-1977 (திங்கள்) காலை 10-30 மணிக்கு வருமாறு சகல வெளிமாவட்ட ஆசிரியர்களையும் அழைக்கின்றோம்.

ந. பாலசுப்பிரமணியம்,
பொதுச்செயலாளர்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

6901


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27-ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka

## புதுடில்லியில் மீண்டும் நடைபெற்ற பேச்சுக்கள்

(புதுடில்லி)

இலங்கையில் இடம்பெற்று வரும் அசம்பாவிதங்கள் தொடர்பாக புதுடில்லியிலுள்ள இலங்கை பதில் ஹைகமிஷனர் திரு. ஜெயக்கொடி நேற்று இரண்டாவது தடவையாக இந்திய அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தினர்.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது, இலங்கையில் தற்போது நிலைமை திருப்திகரமாக உள்ளதென்றும், சிறுபான்மை இன மக்களைப் பாதுகாப்பதில் இலங்கை அரசாங்கம் போதுமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறாதவண்ணம் முப்படையினரின் சேவைகளும் பலப்படுத்தப்பட்டுள்ளதென்றும் திரு. ஜெயக்கொடி இந்திய அதிகாரிகளிடம் தெரிவித்திருந்தார்.

இதே நேரத்தில், இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை குறிப்பாக இந்திய இனத்தவர்களை நேரில் கண்டு விபரங்களை அறிந்துவரும் இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனர் திரு. குருபர்த்சாங்சிங் இந்திய அரசுக்குஅனுப்பும் தனதுஅறிக்கையை இன்னமும் தயாரித்து முடிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்திய ஹைகமிஷனர் தொடர்ந்து இலங்கை அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்திவருவதாகவும், சேத விபரங்கள் முழுமையாக இன்னமும் கிடைக்காததால் அறிக்கையைத்தயாரிப்பதில் சற்றுத் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் இந்திய வானொலி நேற்றிரவு அறிவித்தது.

......

### அரசாங்க ஊழியர்

யாழ்ப்பாணம், சனி

கலவரத்தினால் பாதிக்கப்பட்டு, தென்னிலங்கையிலிருந்துவந்த அரசாங்க ஊழியர்கள், யாழ்ப்பாணத்திலுள்ள தங்கள் இலாகாகிளையில் சென்று கையெழுத்திட்டு வருகின்றனர். (க)

### யாருடையது

செல்வராஜா என்ற சிறுவனால் யாழ்நகரில் உள்ள சாக்கடை ஒன்றில் கண்டெடுக்கப்பட்ட மூன்று திறப்புக்கள் கொண்ட இரண்டு கோர்வைகள் ஈழநாடு காரியாலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.